**CC.No.390/2022 (JM.No.II, DHARMAPURI.)**

**20.03.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**PW6: திரு. திருநாவுக்கரசு**

**முதல் விசாரணை**

1) நான் அதியமான்கோட்டையில் குடியிருந்து வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். கடந்த நான்கு வருடத்திற்கு முன்பு காலை சுமார் 06.30 மணிக்கு அதியமான்கோட்டையில் உள்ள பெருமாள் கோவில் முன்பு இவ்வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து போலீசார் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், பச்சியப்பனும் கையெழுத்திட்டோம். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் காவல் நிலையத்தில் வைத்துதான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. 2020 ம் ஆண்டில் 10 வது மாதத்தில் நான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன், தேதி நியாபகம் இல்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் எழுதி வைத்திருந்த தாளில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

ஒப்பம்/–இரா.மதுவர்ஷினி,
(மு.கூ.பொ) நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.